மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 439, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

439—

மருத்துவமனையைத் தரம் உயர்த்துதல்

***17306—திரு. ஓ.கே. சின்னராஜ்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டுப்பாளையம் தொகுதி, காரமடை ஊராட்சி ஒன்றியம், சின்னகள்ளிப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகளுடன் மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் தொகுதி, காரமடை ஊராட்சி ஒன்றியம், சின்னகள்ளிப்பட்டியில் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. மேலும், காரமடை ஊராட்சி ஒன்றியத்தில் சின்னகள்ளிப்பட்டியிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையம் உட்பட 6 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 2001 ஆம் ஆண்டில், ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்பட வேண்டுமென்று ஆணையிட்டார்கள். அதன்படி காரமடை ஊராட்சி ஒன்றியம், காரமடையில் செயல்பட்டு வரும் ஆரம்ப சுகாதார நிலையத்தை, 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த அரசாணை எண் 293, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 12–10–2001–லே மாண்புமிகு அம்மா அவர்களால் ஆணையிடப்பட்டு, தற்போது சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. எனவே, அதே ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த சின்னக்கள்ளிப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்தும் சாத்தியக்கூறுகள் இல்லை என

2013 மே 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள்.

திரு. ஓ.கே. சின்னராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாடு நல்லவர்களால் ஆளப்படுவதைவிட நல்ல மனிதர்களால் ஆளப்பட வேண்டும்" என்ற வைர வரிகளுக்கேற்ப, நாள்தோறும் நல்ல, நல்ல திட்டங்களை நாட்டு மக்களுக்குத் தந்து, நல்லாட்சி புரிந்து வரும், நாடு போற்றும் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) காரமடை ஒன்றியத்திற்குட்பட்ட சின்னகள்ளிப்பட்டி ஊராட்சியில் தற்போது நூற்றுக்கும் மேற்பட்ட புற நோயாளிகள் அருகில் உள்ள ஏறத்தாழ 40 குக்கிராமங்களிலிருந்து வருகை தந்து சிகிச்சை பெற்றுச் செல்கிறார்கள். அவர்கள் மேல் சிகிச்சைக்குச் செல்ல வேண்டுமென்று சொன்னால், மேட்டுப்பாளையத்தில் சுமார் 20 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள அரசு மருத்துவமனைக்குத்தான் செல்ல வேண்டியுள்ளது. இல்லையென்றால், 2001 ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்களால் தரம் உயர்த்தப்பட்ட 20 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள காரமடை ஆரம்ப சுகாதார நிலையத்திற்குத்தான் செல்ல வேண்டியுள்ளது. ஆகவே, அந்த மருத்துவமனையில் நாள்தோறும் 80-க்கும் மேற்பட்ட உள் நோயாளிகளும், புற நோயாளிகளும் வந்து செல்கின்ற காரணத்தினாலே, தங்கி சிகிச்சை பெறமுடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, வருகிற ஆண்டிலாவது அந்த மருத்துவமனையை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரமுயர்த்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

முற்பகல் 10—50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சின்னகள்ளிப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தில் நாளொன்றுக்கு சராசரியாக 82 வெளி நோயாளிகளும், மாதத்திற்கு சராசரியாக 20 உள் நோயாளிகளும், சிகிச்சை பெறுகின்றனர்.

மாதத்திற்கு 4 பிரசவங்கள் மட்டுமே நடைபெறுகின்றன. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையான, சின்னகள்ளிப்பட்டி ஊராட்சியிலே உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரமுயர்த்துவதற்கு, வாய்ப்புகள் மிகவும் குறைவாக உள்ளது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சின்னகள்ளிப்பட்டி கிராமத்தினுடைய முக்கியத்துவத்தை உணர்த்துவதனால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள்.

திரு. ஓ.கே. சின்னராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருங்காலத்தில் அந்த ஊராட்சியிலிருக்கிற மக்களுடைய நிலைமைகள் கண்டு தரமுயர்த்தித் தரப்படும் என்று சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், வாழும் மனித தெய்வம் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் நன்றியைச் சொல்வதோடு, (மேசையைத் தட்டும் ஒலி) மேட்டுப்பாளையம் நகராட்சி மையப் பகுதியிலே அமைந்திருக்கிற அரசு மருத்துவமனை பழமை வாய்ந்த ஒரு மருத்துவமனை. 125 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட அந்த மருத்துவமனையில் தற்போது ஏறத்தாழ நாளொன்றுக்கு 1,500—க்கும் மேற்பட்ட உள் நோயாளிகளும், புற நோயாளிகளும் வந்து செல்கிறார்கள். அங்கே கட்டப்பட்டிருக்கிற கட்டடங்கள் அனைத்தும் கடந்த காலங்களிலே சிறு, சிறு கட்டடங்களாகக் கட்டப்பட்டு, அவையெல்லாம் பழுதடைந்த நிலையிலே இருக்கின்றன. இதைக் கருத்தில் கொண்டு, துறை கடந்த ஆண்டு ஆய்வு செய்து, பொதுப் பணித் துறையிலே உள்ள மருத்துவப் பிரிவு பொறியாளர்களால் ஆய்வு செய்யப்பட்டு, அந்த மருத்துவமனையிலே உள்வளாகத்திலே ஒருங்கிணைந்த 135 படுக்கைகள் கொண்ட கட்டடத்தைக் கட்டுவதற்கு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, திட்ட மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு, அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. ஆகவே, அரசுக்கு வரப்பெற்றிருக்கின்ற ஒருங்கிணைந்த 135 படுக்கைகள்

2013 மே 8]

கொண்ட, அந்த மருத்துவமனையிலேயே அந்தக் கட்டடத்தைக் கட்டி இப்பொழுதும், எதிர்காலத்திலும் வருகை தரும் எண்ணற்ற பொதுமக்கள் மருத்துவ சிகிச்சை பெறுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்கள்வாயிலாகக் கேட்டு, அமருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ளபடி, மேட்டுப்பாளையம் அரசு மருத்துவமனை கிட்டத்தட்ட 125 ஆண்டுகள் பழமை வாய்ந்த மருத்துவமனை. இந்த மருத்துவமனையினுடைய கட்டட வசதிகள் குறித்து கடந்த ஆண்டு துறையின் சார்பாக ஆய்வு நடைபெற்றது. அது தற்போது துறையினுடைய ஆய்விலே இருக்கின்றது. வேகமாக ஆய்வு செய்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்ற செய்தியை மாண்புமிகு உறுப்பினருக்குத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.*

[குறிப்பு: *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

2. விதி 110–ன்கீழ் அறிக்கைகள்

(அ) நெசவாளர்களுக்கு பசுமை வீடுகள் உள்ளிட்ட சலுகைகள், பட்டு வளர்ச்சி மற்றும் கைவினைஞர் நலத் திட்டங்கள் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110–ன்கீழ் 3 அறிக்கைகளை அளிப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். மேலும், அமர்ந்து கொண்டு அறிக்கைகள் அளிப்பதற்கு அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.*